முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் புகழ்த்துணை நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

30.12.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **தயவு குணம் வளர்த்து உலகோரிடை**
**தரும பலம் பெருக்கும் அரங்கா**
**தயவே வடிவாக வந்த தேசிகா**
**தரணியிலே உன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி சிலை திங்கள்**
**தெரியவே மூவை திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 15ம் நாள் 30.12.2018, ஞாயிற்றுக்கிழமை)**
**தேசிகனுக்கு புகழ்த்துணை நாயனார் யானும்**

3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர் ஞானம் தேடி அலைபவர்களே
ஞானவான்களாக நிலை உயர
ஞானிகளை துணை பெற வேண்டும்

4. துணைவர நல் அருள் பெற
துன்பமான கெடுகுணம் நீக்கி
இணையிலா மென் மனமாக
எல்லோர்க்கும் ஈகை செய்யும்

5. செய்யும் உயர் குணமும் வளர்த்து
சினமெனும் கொடிய குணமகற்றி
மெய்யுடனே பிறர் மனம் நோகா
மென்மையான சொற்கள்பட வாழ்ந்து

6. வாழ்ந்து தானதருமம் செய்து
வள்ளல் தன்மை கொண்டாலே
ஊழ் அகற்றி ஞானியர் பெருமக்கள்
உயர் ஆசி தந்து துணைபட வந்து

7. வந்துமே வேண்டிய வரங்களும்
வாழும் காலமே ஞானிகளாகும்
சிந்தை தெளிவும் திடமும் தருவர்
சிறப்பறிவு ஊட்டும் ஞானகுருவாக

8. குருவாக வந்தநல் அரங்கன்
குமரகிரி சென்று கண்டு
தருமம் கலந்து ஆசி பெற
தவராசனிடம் தீட்சை பெற்று வர

9. வருகவே மக்களுக்கு குருவருளால்
வாழ்க்கையில் சகல தெளிவும்
தரும பலம் பெருக்க பெருக்க
தரணியோர்கள் நிலை உயர்ந்து

10. உயர்ந்துமே உலகம் எங்குமே
உண்மையான ஞானவழி செயல்கள்
தயவு வழியாக பரவி பெருகிட
தலைவன் முருகப்பெருமான் ஆளுமை

11. ஆளுமை வந்து சிறப்பு தரும்
அரங்கஞானி நோக்கமாக வந்த
வலுவான ஞானயுகம் அமையும்
வழுத்திய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் புகழ்த்துணை நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலக மக்களிடத்து தய உணர்வை வளர்த்து உலகின் தருமபலத்தை பெருக்கிடும் அரங்கமகா தேசிகனே தயவே வடிவாக முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்த அரங்கமகாஞானியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 15ம் நாள் 30.12.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே புகழ்த்துணை நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் புகழ்த்துணை நாயனார்.

உயர்வுமிக்க ஞானத்தினை உலகினில் தேடி அலைகின்ற மக்களே நீங்கள் ஞானவான்களாக ஆக வேண்டுமாயின் ஞானிகளின் துணை அவசியம் வேண்டுமப்பா, ஞானிகளின் துணையால் மட்டுமே ஞானம் பெற முடியும்.

ஞானிகளின் துணை உங்களுக்கு கிடைத்திடுமாயின் முற்றுப்பெற்று ஞானம் அடைந்த சற்குருவின் நட்பு உங்களுக்கு கிடைக்குமாயின் ஞானிகளின் அருள் பெறலாம். ஞானிகளின் அருளைப் பெற்றிட்டால் உங்களுள் உள்ள துன்பமயமான கெட்ட குணங்கள் எல்லாம் நீங்கி உங்களது மனம் மென்மையாகி இணையில்லா இரக்ககுணம் உங்களுள் வந்து எல்லோர்க்கும் ஈகை செய்யும் பிறர் துன்பம் கண்டு கொடுத்து உதவும் பரோபகார குணம் வளர்ந்திடும்.

ஈகையெனும் உயர்குணம்தனை உங்களுள் வளர்த்து சினம் என்கிற கொடிய குணம்தனை அகற்றி உண்மையுடன் பிறர் மனம் நோகாமல் மென்மையான சொற்களை பயன்படுத்தி பேசி வாழ்ந்திட வேண்டும். தானதருமங்களை உங்களால் இயன்ற அளவு செய்து உங்களது கொடுக்கும் குணத்தை வள்ளல் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பிறர் துன்பம் கண்டு இரங்கி தானதருமம் செய்து இரக்க சிந்தையுடன் வாழ்ந்தாலே ஞானிகளெல்லாம் உங்களது செயல் கண்டு மகிழ்ந்து உங்களது ஊழ்வினைகளான முன் ஜென்ம பாவங்களை எல்லாம் அகற்றி ஞானியர்கள் எல்லாம் உங்களுக்கு உயர்வான ஆசிகளை தந்து உங்களுக்கு துணையாக இருந்து உங்களுக்கு வேண்டிய வரங்களைத் தந்து நீங்கள் வாழும் காலத்திலேயே ஞானிகளாக ஆகின்ற வகையிலே சிந்தை தெளிவையும் மனோதிடத்தையும் தந்திடுவார்கள்.

சிறப்பறிவினை ஊட்டி ஞானம் அளிக்கும் மகா ஞான சற்குருவாக, இவ்வுலகின் ஒப்பற்ற குருவாக கலியுக மீட்பின் ஞானகுருவாக வந்துதித்த மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் அமைத்திட்ட குமரனின் பெயரால் அமைந்த குமரகிரி தலத்திற்கு சென்று, குமரனை வணங்கி ஆங்கே தருமத்திற்கு உதவி செய்து ஆசி பெற்று தவராசன் ஆறுமுக அரங்கரின் திருவடி பணிந்து பயபக்தியுடன் தீட்சை உபதேசம் பெற்று வர, அவர்களுக்கு குருவருளால் வாழ்வினிலே சகலவிதமான சந்தேகங்களும் நீங்கி தெளிவு உண்டாகும். தருமபலம்தனை பெருக்கிட பெருக்கிட உலகோர் நிலை உயர்வடைந்து உலகம் எங்கும் உண்மையான ஞானவழி செயல்பாடுகள் எல்லாம் தயவு வழியாக பரவி பெருகிட உலகினில் ஞானத்தலைவன் முருகப்பெருமானின் ஆட்சி விரைந்து உண்டாகி சிறப்பான உலகினை அமைத்திடும். ஆறுமுக அரங்கனின் அவதார நோக்கமான கலியுகம் மாறி ஞானயுகம் அமையும். அவதார நோக்கமும் நிறைவேறி வலுவான ஞானயுகம் இவ்வுலகினில் அமைந்திடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் புகழ்த்துணை நாயனார்.

–சுபம்–